...டயில் விரைவில் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லி ஓராண்டுக்காலம் ஆகிவிட்டது. அது இன்னும் பரிசீலனையில் இருப்பதால் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த விடத்திலாம்பட்டியில் மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்றால் நகராட்சி சார்பிலேதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சியின் நிதிநிலை சரியாக இல்லை. அந்த நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு 10,83,000 ரூபாய்தான் வருமானம் வருகிறது. அந்த பாலத்தை அமைக்க 10 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டும். ஆகவே, அவர்கள் அரசிடம் மானியம் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த வேலை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த மாமுண்டி ஆறு மணப்பாறை நகராட்சியை இரண்டாகப் பிளந்துவிடுகிறது. சிறு மழை பெய்தால்கூட மணப்பாறை நகராட்சி மக்கள் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் செல்ல முடியாமல் கஷ்டப்படுவதால நகராட்சியின் நிதியிலிருந்து அங்கே பாலம் கட்ட முடியாத காரணத்தால் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஆகவே அரசாங்கமே, நேரடியாக இந்தத் திட்டத்தை ஏற்று, நிறைவேற்ற, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தப் பகுதிக்கு நானே நேரில் சென்று வந்திருக்கிறேன். ஆகவே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேரம்பாக்கம், மணவாளநகர் ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 36—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம், மணவாளநகர் ஊராட்சிகளுக்கு மேல் நிலைத்தொட்டி அமைத்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பேரம்பாக்கம் ஊராட்சிக்கு மேல்நிலைத் தொட்டி அமைக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஏற்கனவே குடிநீர் வினியோகம் செய்யப்பட்டுவருவதால் மணவாள நகர் ஊராட்சிக்கு மேல் நிலைத் தொட்டி புதிதாக அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) ஆழ்துளை கிணறு வேலை முடிந்து அதனுடைய கொடுதிறன் அறிந்து மதிப்பீடு தயாரித்து பேரம்பாக்கம் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆழ்துளை கிணறு பணி நடை பெற்று வருகின்றது.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அது எப்போது ஆரம்பிக்கப்படும்? அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முடியும் தருவாயில் இருக்கிறது

கம்போஸ்ட் உர விற்பனை

*வினா எண். 37—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல நகரசபைகளில் கம்போஸ்ட் உரம் விற்பனையாகாமல் தேங்கிக் கிடைக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அவற்றை உடனடியாக விற்பதற்கு அரசின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டு கம்போஸ்ட் எரு விற்பனை குறைந்துள்ளது.

(ஆ) கம்போஸ்ட் உரத்தினை விற்பதற்கு 10 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு உரத்தினை வேகமாக விற்பனை செய்ய அறிவுரை வழங்கியும் உரத்தின் தரத்தினை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டும் தேவையானதால் மொத்தமாக பொது ஏலத்தில் விடவும் தக்க அறிவுரைகள் நகராட்சி, நிர்வாக இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கம்போஸ்ட் உரம் அதிக விலைக்கு விற்கப்படுவதால் வாங்க முடியவில்லை என்று விவசாயிகள் குறை கூறுகிறார்கள். ஆகவே விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?